
# செயலாற்றுகை அறிக்கை
# 2014

## இலங்கை பொலிஸ் திணைக்களம்



## நோக்கு

குற்றச் செயல் மற்றும் வன்முறை
தொடர்பான பயம் இன்றி
நம்பிக்கையுடன்
வாழ்வதற்குரிய அமைதியான
சூழலொன்றை
உருவாக்குதல்

## அரும்பணி

சகலருக்கும் சமமாக,
எவருக்கும் பாதிப்பை
ஏற்படுத்தாமல்
குற்றச் செயல்களையும்
பயங்கரவாதத்தையும்
தடுப்பதற்கும், சமாதானத்தைப்
பாதுகாத்துக்கொள்ளுவதற்கும்,
நாட்டில் சட்டத்தைப் பேணுவதற்கும்,
அதை நடைமுறைப்படுத்துவதற்கும்
இலங்கை பொலிஸ்



# பொலிஸ் மா அதிபரின் செய்தி

இலங்கை பொலிஸ் ஒன்றரை நூற்றாண்டை நிறைவு செய்வதற்கு இன்னும் எஞ்சியிருப்பது 02 ஆண்டுகள் என்ற குறுகிய காலமே. ஒரு நாளில் 24 மணித்தியாலங்களும் கடமை புரிகின்ற பொலிஸ் ஒரு வருடத்தில் ஆற்றுகின்ற சேவை மகத்தானது. இப் பணிகளில் பெரும்பாலானவை சமூக சேவையாக இருப்பது தனித்துவமானதாகும். வருடாந்தம் மேற்கொள்ளப்படுகின்ற கடமைகள் விபரமாகவும் ஒப்பீட்டுரீதியாகவும் வருடாந்த பொலிஸ் மா அதிபரின் நிர்வாக அறிக்கைமூலம் சமர்ப்பிக்கப்படுகின்றது. அதற்குப் புறம்பாக நாம் ஒரு வருடத்தில் திட்டமிடுகின்ற நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணக் கருக்களையும் முன்மொழிவுகளையும் எவ்வளவு தூரத்திற்கு வெற்றிகரமாக நிறைவேற்ற முடிந்துள்ளது என்பதை ஆராய்ந்தறிவதற்கும், எதிர்வரும் ஆண்டில் மேற்கொள்ள வேண்டிய சேவைகளை விரிவுபடுத்துவதற்கு தோற்றுவாய்களாக்கிக்கொள்ளுவதற்கும் ஓர் அணியாக அடைந்த நிதிசார் முன்னேற்றம் உள்ளிட்ட அனைத்து முன்னேற்றத்தை மீளாய்வுசெய்வதும் இச் செயலாற்றுகை அறிக்கையை சமர்ப்பிப்பதன் முக்கிய நோக்கமாகும்.

2013ஆம் ஆண்டின் ஆரம்பத்திலேயே அரச சேவை உறுதிப் பிரமாணத்தைப் பின்பற்றி ஒழுங்கமைப்பு ரீதியாக அரசும் நாடும் எதிர்பார்க்கின்ற சேவைகளை நிறைவேற்றுவதற்கு மீட்டெடுத்த மண்ணில் சமாதானத்தை நிலைநிறுத்தி அதைப் பாதுகாத்துக்கொள்வதற்கு நாம் அணிதிரண்டோம். குற்றத் தடுப்பு, போதைப்பொருள் பயன்பாட்டைத் தடுத்தல், வாகன விபத்துக்களைத் தடுத்தல் என்பவற்றின்மூலம் அதற்காக விரயமாகும் பணத்தைச் சேமித்து நாட்டில் இடம்பெறுகின்ற பாரிய அபிவிருத்திப் பணிகளுக்கு பங்களிப்புச்செய்ய முடிந்தமை நாம் பெற்ற வெற்றியாகும். அத்துடன் மக்களின் சுகாதார நலனைப் பேணுவதற்காக உரிய பாதுகாப்பை வழங்கியதன் ஊடாக பொலிஸ் நாட்டின் மனிதவள அபிவிருத்திக்கும் பங்களிப்புச் செய்துள்ளது.

இலங்கை பொலிஸ் ஒருவருக்கொருவர் பொறுப்புடனும் வகைப்பொறுப்புடனும் செயலாற்றுவதற்கு இணைந்த சங்கிலிக் கோர்வைபோல உருவாக்கப்பட்டுள்ளது. ஏதேனும் ஒரு பணியை சரியாக நிறைவேற்றுவதற்கு அனைவருடைய அர்ப்பணிப்பும் பங்களிப்பும் கட்டாயமாகும். கடந்த ஆண்டு முழுவதும் இலங்கை பொலிஸ் அனைத்து துறைகளிலும் வினைத்திறனையும் வெற்றியையும் அடைந்த முறைபற்றியும் அனைத்து சவால்களுக்கு முகம்கொடுத்த முறைபற்றியும் இவ் அறிக்கையின்மூலம் ஆராய்ந்தறியும்படி நான் இலங்கை குடியரசின் பொலிஸ் மா அதிபர் என்றவகையில் உங்களை அழைக்கின்றேன்.

**என்.கே. இலங்ககோன்**


**பொலிஸ் மா அதிபர்**

# உள்ளடக்கம்


| துறை | பக்கம் |
|---|---|
| 01. இலங்கை பொலிஸ் பதவிகளின் பதவி படிநிலையும் படையினர் எண்ணிக்கையும் | 01 - 06 |
| 02. குற்றத் தடுப்பும் விசாரணையும் | 07 - 08 |
| 03. பல்வேறு முறைப்பாடுகளின் விசாரணை | 09 - 10 |
| 04. வாகனை முகாமைத்துவமும் வீதிப் பாதுகாப்பும் | 11 - 12 |
| 05. மது மற்றும் போதை ஒழிப்பு | 13 - 14 |
| 06. சட்டக்குற்றங்கள் மற்றும் ஊழல் ஒழிப்பு | 15 - 15 |
| 07' சமூக பொலிஸ் சேவைகள் | 16 - 17 |
| 08. சூழல் பாதுகாப்பு | 18 - 18 |
| 09. பொலிஸ் தலைமை நிலையத்தில் நடைமுறைப்படுத்தப்படுகின்ற பொதுமக்கள் சேவைகள் | 19 - 20 |
| 10. மனிதவள மேம்பாடு | 21 - 23 |
| 11. பௌதிக வளங்கள் மேம்பாடு | 24 - 24 |
| 12. நிதியியல் செயலாற்றுகை | 25 - 26 |
| 13. 2014 ம் ஆண்டு செயற்திறன் சுருக்கமாக | 27 - 27 |

# 01. இலங்கை பொலிஸ்

## பதவிகளின் பதவி படிநிலையும் படையினர் எண்ணிக்கையும்



பொலிஸ்மா அதிபர்

சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர்-10(அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கை 11)

பிரதிப் பொலிஸ் மா அதிபர்- 28(அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கை 38)

சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சர் ஆண்-87
சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சர் பெண்-0

பொலிஸ் அத்தியட்சர் ஆண்-29
பொலிஸ் அத்தியட்சர் பெண்-0

உதவிப் பொலிஸ் அத்தியட்சர் ஆண்-339
உதவிப் பொலிஸ் அத்தியட்சர் பெண்-10

பிரதம பொலிஸ் பரிசோதகர் ஆண்-696
உதவிப் பொலிஸ் அத்தியட்சர் பெண்-17

பொலிஸ் பரிசோதகர் ஆண்-2523
பொலிஸ் பரிசோதகர் பெண்-249

உதவிப் பொலிஸ் பரிசோதகர் ஆண்-4536
உதவிப் பொலிஸ் பரிசோதகர் பெண்-558


மகா சார்ஜன் 45

பொலிஸ் சார்ஜன் ஆண் 15750
பொலிஸ் சார்ஜன் பெண் 1409
பொலிஸ் சார்ஜன் சாரதி 546


பொலிஸ் கொஸ்தாப்பு ஆண் 47647
பொலிஸ் கொஸ்தாப்பு பெண் 5924
பொலிஸ் கொஸ்தாப்பு சாரதி 546

அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கை 84145 ஆக இருக்கின்ற அதேவேளையில் தற்பொழுது 73209 ஆளணியினர் சேவையில் ஈடுபட்டுள்ளனர். இதில் விசேட செயலணி படையினரின் எண்ணிக்கை உள்ளடங்கா


# 1:1 பொலிஸ் நிர்வாக கட்டமைப்பு




# 1:1:1 பிராந்திய பொலிஸ் பிரிவு கட்டமைப்பு



# 1:1:2 செயற்பாட்டு பிரிவு



## 1:1:3 விசேட செயலணியின் கட்டமைப்பு, கடமை மற்றும் படையினர் எண்ணிக்கை கட்டமைப்பு



**கடமை**

1. குற்றத் தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்தல் (திட்டமிட்ட குற்றச்செயல்கள்)
2. உள்நாட்டு வெளிநாட்டு பிரபுக்கள் பாதுகாப்பு கடமை
3. தேடுதல் மற்றும் குண்டு செயலிழப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.
4. சட்டத்தையும் ஒழுங்கையும் பாதுகாப்பதற்கு பொலிஸ் திணைக்களத்திற்கு உதவுதல்.
5. இயற்கை மற்றும் மனித செயற்பாடுகள் காரணமாக நிகழும் திடீர் அனர்த்தங்களின்போது மக்கள் வாழ்க்கையை சுமுக நிலைக்கு கொண்டுவருவதற்கு உதவுதல்.
6. சமூக விரோத செயல்களை அடக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல்.(சட்ட விரோத போதைப்பொருள் கடத்தல், கஞ்சா கடத்தல் போன்றவைகள்)
7. இயற்கை சொத்துக்களைப் பாதுகாத்தல் மற்றும் மனிதனால் மேற்கொள்ளப்படுகின்ற சூழலியல் அழிவுகளைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுத்தல்.
8. உயிர்ப் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்


# 02. குற்றத் தடுப்பும் விசாரணையும்

## நாட்டில் பதிவாகிய பாரிய குற்றங்கள்

01. 01. 2014 முதல் 31.12.2014 வரையான காலப்பகுதியில் இடம்பெற்ற மொத்த பாரிய குற்றங்கள் 50962. ஆண்டின் முடிவில் அவற்றில் 29396 குற்றங்களுக்கு தீர்வு காணப்பட்டது. இது 58% மாகும்.

2013 இல் பதியப்பட்ட மொத்த பாரிய குற்றங்கள் 55349. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 2014 இல் இது 8% குறைந்துள்ளது.

வரைபு 1





மூலம் : பொலிஸ் குற்றத்தடுப்பு பிரிவு

## நாட்டில் பதிவாகிய பெரிய குற்றங்கள்

01. 01. 2014 முதல் 31.12.2014 வரையான காலப்பகுதியில் இடம்பெற்ற மொத்த பாரிய குற்றங்கள் 12656. ஆண்டின் முடிவில் அவற்றில் 7403 குற்றங்களுக்கு தீர்வு காணப்பட்டது. இது 58% மாகும். 2013 இல் பதியப்பட்ட மொத்த பாரிய குற்றங்கள் 13220. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 2014 இல் இது 4% குறைந்துள்ளது.

வரைபு 2





மூலம் : பொலிஸ் குற்றத்தடுப்பு பிரிவு

மேற்குறித்த காரணங்களுக்கு ஏற்ப பாரிய குற்றங்கள் 8% மாகவும் பெரிய குற்றங்கள் 4% மாகவும் குறைவடைதுள்ளன இது பொலிஸ் திணைக்களத்தின் வினைத்திறன் அதிகரித்துள்ளதை தெளிவாக காட்டுகிறது.

# பதிவு செய்யப்பட்ட பாரிய குற்றங்கள்

வரைபு 3




மூலம் : பொலிஸ் குற்றத்தடுப்பு பிரிவு

2014 இல் பதியப்பட்ட மனிதர்களுக்கும் சொத்துகளுக்கும் எதிரானதாக அறிபப்படும் பாரிய குற்றங்களை எடுத்துக் கொண்டால் இவற்றில் கொலை 6% கற்பழிப்பு 7% கடத்தல் 17% கொள்ளை0.1% திருட்டு 02% ஆக குறைந்தது காணப்பட்டன. இதனை அடைவதற்கு பதிய தொழில்நுட்ட பாவனை பிரதான பங்கை வகித்தது. உதாரணமாக தானியங்கி கைரேகை கருவி தொழில்நுட்பம் மூலம் குற்ற விசாரணை வேகப்படுத்தப்பட்டமையை குறிப்பிடலாம்.

## 2:1 பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கு எதிரான குற்றங்களை கட்டுப்படுத்துதல்

பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கு சமூகத்தில் உள்ள அங்கீகாரம் நாட்டின் ஸ்திரத்தன்மை மற்றும் முன்னேற்றத்தின் அங்கீகாரமாக கொள்ளப்படுகிறது. இதற்கமைய இலங்கை பொலிசார் பெண்கள் மற்றும் சிறுவர்களின் பாதுகாப்பு தொடர்பில் விசேட கவனம் செலுத்துகிறார்கள்.சகல பொலிஸ் நிலையங்களும் பெண்கள் மற்றும் சிறுவர் பாதுகாப்பு பிரிவு மூலம் விசாரணைக்கு முன்னுரிமை அளித்து பிரச்சினைகளை தீர்ப்பதை கீழே தரப்பட்டுள்ள அட்டவணை காட்டுகிறது.இது 2014 இல் தீர்வுகாணப்பட்ட குற்றங்களை கடந்த 2 வருடங்களுடன் ஒப்பிட்டு காட்டுகிறது.

அட்டவணை 1

| குற்றத்தின் வகை | பதியப்பட்டவை | தீர்க்கப்பட்டவை | பதியப்பட்டவை | தீர்க்கப்பட்டவை | பதியப்பட்டவை | தீர்க்கப்பட்டவை |
|---|---|---|---|---|---|---|
| சிறுவர்களுக்கு எதிரான குற்றங்கள் | 6,038 | 1,263 | 6,040 | 2,109 | 5,868 | 1,648 |
| பெண்களுக்கு எதிரான குற்றங்கள் | 7,798 | 2,062 | 8,320 | 4,672 | 8,434 | 4,399 |
| மொத்தம் | **13,836** | **3,325** | **14,360** | **6,781** | **14,302** | **6,047** |

மூலம் : சிறுவர் மற்றும் பெண்கள் பொலிஸ் பணியகம்

## 03. பல்வேறு முறைப்பாடுகளின் விசாரணை

பல்வேறுபட்ட முறைப்பாடுகளின் விசாரணை பொலிஸ் திணைக்களத்தின் இதயம் போன்றது. பொலிசாருக்கு பெருமளவு முறைப்பாடுகள் கிடைக்கப்பெறுகின்ற போதிலும் அவற்றுக்கு விரைவான தீர்வுக்கு உத்தரவாதம் வழங்கப்படுகிறது.

2014 இல் பல்வேறு விதமான முறைப்பாடுகளுக்கு தீர்வு வழங்கப்பட்டமையை கீழ் உள்ள அட்டவணையில் காணலாம்.

அட்டவணை. 2

| முறைப்பாடுகளின் தன்மை | | பதியப்பட்ட முறைப்பாடுகள் | உண்மையான முறைப்பாடுகளின் தொகை | விசாரிக்கப்பட்ட முறைப்பாடுகளின் தொகை | பொலிசாரால் மத்தியஸ்தம் செய்யப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை | இணக்க சபை மூலம் தீர்க்கப்பட்ட முறைப்பாடுகளின் தொகை | திரும்பப் பெறப்பட்ட முறைப்பாடுகளின் தொகை | விசாரணை நடந்து கொண்டிருக்கும் முறைப்பாடுகளின் தொகை |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | **தாக்குதல்** | 202137 | 202137 | 201778 | 155141 | 16660 | 20404 | 9573 |
| 2 | அச்சுறுத்திய திட்டிய | 207845 | 207845 | 207428 | 174457 | 5439 | 19021 | 8511 |
| 3 | குடும்ப தகராறுகள் | 148327 | 148327 | 148073 | 120161 | 1880 | 19636 | 6396 |
| 6 | நிலத் தகராறுகள் | 99493 | 99493 | 99209 | 85447 | 3703 | 5560 | 4499 |
| 7 | அமைதிக்கு குழப்பம் விளைவித்தமை | 3933 | 3933 | 3933 | 3174 | 112 | 376 | 271 |
| 8 | நம்பிக்கைக்கு பங்கம் விளைவித்தமை | 13975 | 13975 | 13890 | 10313 | 553 | 1444 | 1580 |
| 9 | பணம் மற்றும் பொருட்கள் தொடர்பிலானவை | 128596 | 128596 | 128383 | 104483 | 5266 | 10352 | 8282 |
| 10 | பெற்றோரை பராமரிக்காமை | 7863 | 7863 | 7838 | 6335 | 143 | 1007 | 353 |
| 11 | வாடகை தொடர்பிலான தகராறுகள் | 8430 | 8430 | 8420 | 6512 | 266 | 857 | 785 |
| 12 | ஊழியர் மோதல்கள் | 3778 | 3778 | 3754 | 3022 | 69 | 353 | 310 |
| 13 | சேதம் | 20321 | 20321 | 20177 | 15602 | 1377 | 1896 | 1302 |
| 14 | மனநோய் தொடர்பிலான தகராறுகள் | 8157 | 8157 | 8121 | 6629 | 212 | 885 | 395 |
| 15 | காணமல் போனமை | 7333 | 7333 | 7325 | 2662 | 07 | 3466 | 1190 |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 16 | ஏனையவை | 205460 | 205460 | 205084 | 162520 | 6175 | 25167 | 11222 |
| | மொத்தம் | **1065648** | **1065648** | **1063413** | **856458** | **41862** | **110424** | **54669** |

மூலம்: பொலிஸ் புள்ளிவிபரவியல் பிரிவு

2014 இல் பல்வேறு விதமான முறைப்பாடுகளுக்கு தீர்வு வழங்கப்பட்டமையைமேலே உள்ள அட்டவணை காட்டுகிறது.. கிடைக்கப்பெற்ற 1065648 முறைப்பாடுகளில் 1063413 முறைப்பாடுகளுக்கு பொலிசாரால் தீர்வு காணக்கூடியதாக இருந்தது. அது மட்டுமல்லாது அவற்றில் 856458 பொலிஸ் நிலையத்திலேயே தீர்க்கப்பட்டமை
பொலிஸ் சேவையின் தொழில்பற்றையும் வினைத்திறனையும் காட்டுகிறது.

# 04. வாகன முகாமைத்துவமும் வீதிப் பாதுகாப்பும்

உயிர்களுக்கும் சொத்துகளுக்கும் சேதம் ஏற்படாவண்ணம் விபத்துகளை குறைத்து வீதியை அனைவருக்கும் பாதுகாப்பான இடமாக மாற்றுதல் பொலிஸ் திணைக்களத்தின் பிரதான நோக்கமாகும். எனவே இது தொடர்பில் பல பொலிஸ் அலுவலர்களும் வளங்களும் பயன்படுத்தப்படுகிறது.

நாளுக்கு நாள் வாகனங்களின் எண்ணிக்கை அதிகரிக்கின்ற போதும் சட்டத்தை மதிக்கும் பொதுமக்களாலும் பொலிஸ் அலுவலர்களின் திறமை காரணமாகவும் விபத்துகளின் எண்ணிக்கை குறைவடைந்துள்ளது. பல்வேறு குழுக்களால் மேற்கொள்ளப்பட்ட விழிப்புணர்வு செயற்பாடுகளால் வீதி பாதுகாக்கப்பட்டு விபத்துக்கள் குறைவடைந்துள்ளமையை கீழ் உள்ள அட்டவணை காட்டுகிறது.

வீதி விபத்துக்கள் அட்டவணை. **03**

| ஆண்டு | உயிராபத்து விபத்துக்கள் | பாரிய விபத்துக்கள் | சிறிய விபத்துக்கள் | சேதத்துக்குள்ளான விபக்கக்கள் | உயிராபத்து விபத்தினால் இறந்தவர்களின் தொகை | விபத்துக் களின் எண்ணிக்கை | வாகனங்களின் எண்ணிக்கை | வாகனங்களுக்கு இடம்பெற்ற விபத்துக்கள் |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 2,317 | 7,209 | 14,680 | 17,939 | 42,145 | 2,444 | 4,877,027 | 9 |
| | 2,190 | 6,870 | 13,525 | 15,292 | 37,877 | 2,324 | 5,203,678 | 7 |
| | 2,261 | 6,847 | 12,950 | 13992 | 36,050 | 2,436 | 5,633,234 | 6 |

மூலம் : பொலிஸ் புள்ளிவிபரவியல் பிரிவு

## 4: 1 பொலிஸ் அலுவலர்களுக்கான போக்குவரத்து தொடர்பிலான பயிற்சி நெறிகள்

அட்டவணை. **04**

| காலப்பகுதி தொடக்கம்-வரை | நிலை | அலுவலர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 2014.01.20- 2014.01.24 | பொப/உபொபபொசா/பொகொ//பொகொசா | 39 |
| 2014.04.07-2014.04.12 | பொசா/பெபொகொ | 64 |
| 2014.09.12 | பொசா/பொகொ | 65 |
| 2014.09.13 | பொசா/பொகொ | 65 |
| | மொத்தம் | **233** |

மூலம் : பொலிஸ் தலைமையக போக்குவரத்து பிரிவு

## 04.2 வீதி பாதுகாப்பு தொடர்பில் பல்வேறு துறையினர் மத்தியில் விழிப்புணர்வு

அட்டவணை. **05**

| நிகழ்சிகள் | மொத்த நிகழ்சிகள் | பாடசாலைகளின் தொகை | மாணவர்களின் தொகை | பாதசாரிகளின் தொகை |
|---|---|---|---|---|
| பாடசாலை மட்ட கருத்தரங்குகள் | **65** | **350** | **40535** | **-** |
| போக்குவரத்து கட்டுப்பாட்டு திட்டங்கள் | **39** | **250** | **2916** | **-** |
| காட்சி | **45** | **350** | **40000** | **7000** |
| கண்காட்சி கூடங்கள் | **02** | **100** | **40000** | **45000** |
| மொத்தம் | **151** | **1050** | **1,23451** | **52000** |

மூலம் : **பொலிஸ் தலைமையக போக்குவரத்து பிரிவு**

## 05. மது மற்றும் போதை ஒழிப்பு

சமூகத்தில் பாரிய பிரச்சினையாக காணப்படும் மதுபானம் மற்றும் போதை பொருட்களை உற்பத்தியையும் பயன்பாட்டையும் குறைக்க பொலிஸ் திணைக்களம் பாரிய பங்களிப்பை வழங்கியிருந்தது. திடீர் சோதனைகள் மூலம் பெருமளவு மது மற்றும் போதை பொருட்கள் பிடிக்கப்பட்டன. போதை பொருள் தொடர்பிலான சோதனைகள் மற்றும் பதியப்பட்ட வழக்குகள் கூட 96% உள்ளன. கீழ் காட்டப்பட்டுள்ள அட்டவணைகள் மூலம் விபரங்களை அறியலாம்

**மதுவரிக் குற்றங்களும் தீர்வுகளும் தொடர்பிலான அறிக்கை**

அட்டவணை 06

| # | மதுவரி குற்றங்கள் | 2012 | | 2013 | | 2014 | |
|---|---|---|---|---|---|---|---|
| | | பதியப்பட்டது | தீர்வு காணப்பட்டது | பதியப்பட்டது | தீர்வு காணப்பட்டது | பதியப்பட்டது | தீர்வு காணப்பட்டது |
| 1 | சட்டவிரோத மதுபான உற்பத்தி | 6,637 | 6,352 | 8,529 | 8,125 | 7,041 | 6,576 |
| 2 | உரிமமின்றிய கள் உற்பத்தி | 58 | 58 | 49 | 48 | 21 | 21 |
| 3 | அரசாங்கத்திற்கு சொந்தமான மதுபான சட்டவிரோத உற்பத்தி | 104 | 103 | 29 | 25 | 45 | 41 |
| 4 | சட்டவிரோத ஸ்பிரிட் உற்பத்தி | 203 | 193 | 344 | 302 | 712 | 689 |
| 5 | சட்டவிரோதமாக மதுபானத்தை வைத்திருத்தல் அல்லது விற்பனை செய்தல் | 89,966 | 84,781 | 85,655 | 82,436 | 82,042 | 79,386 |
| 6 | சட்டவிரோதமாக கள் வைத்திருத்தல் அல்லது விற்பனை செய்தல் | 5,361 | 5,106 | 7,241 | 6,678 | 6,160 | 5,900 |
| 7 | அரசாங்கத்திற்கு சொந்தமான மதுபானத்தை உரிமமின்றி விற்பனை செய்தல் அல்லது 7.5 லீட்டரை விட அதிகமாக வைத்திருத்தல் | 14,710 | 14,164 | 14,354 | 13,692 | 12,358 | 11,421 |
| 8 | உரிமமின்றி மதுவை விற்பனை செய்தல்/விற்பனைக்காக வைத்திருத்தல் | 1,333 | 1,258 | 1,889 | 1,775 | 1,479 | 1,427 |
| 9 | சட்டவிரோதமாக ஸ்பிரிட் உற்பத்தி செய்தல் /விற்பனைக்காக வைத்திருத்தல் | 298 | 296 | 487 | 474 | 545 | 540 |
| 10 | தகுந்த உரிமம் இன்றி அரசாங்கத்திற்கு சொந்தமான மதுபானத்தை கொண்டு செல்லல் சட்ட விரோத மதுபானம் / கள்/ஸ்பிரிட் கொண்டு செல்லல் (7.5 லீட்டரை ஐ விட அதிகமானது) | 386 | 380 | 351 | 341 | 355 | 336 |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 11 | சட்டவிரோதமாக மது/ கள்/ஸ்பிரிட் உற்பத்திக்கான பொருட்களை வைத்திருத்தல் | 515 | 489 | 487 | 458 | 351 | 344 |
| 12 | மதுவரியின் கீழான ஏனைய தவறுகள் | 5,797 | 5,617 | 5,188 | 4,844 | 3,681 | 3,553 |
| **மொத்தம்** | | **125,371** | **118,797** | **124,603** | **119,198** | **114,790** | **110,234** |

மூலம்: பொலிஸ் போதை தடுப்பு பணியகம்

## போதை பொருட்கள் தொடர்பிலானவை

அட்டவணை 07

| # | போதை பொருட்கள் | 2012 | | 2013 | | 2014 | |
|---|---|---|---|---|---|---|---|
| | | பதியப்பட்டது | தீர்வு காணப்பட்டது | பதியப்பட்டது | தீர்வு காணப்பட்டது | பதியப்பட்டது | தீர்வு காணப்பட்டது |
| 1 | கஞ்சா | 36,384 | 34,970 | 45,921 | 44,651 | 46,884 | 45,997 |
| 2 | அபின் | 5 | 5 | 11 | 10 | 1 | 1 |
| 3 | கஷிஸ் | 8 | 4 | 10 | 10 | 752 | 660 |
| 4 | ஹெராயின் | 16,886 | 15,283 | 24,400 | 22,966 | 23,578 | 22,041 |
| 5 | மார்பின் | 2 | 2 | 12 | 12 | 2 | 2 |
| 6 | கொகேயன் | 6 | 0 | 0 | 0 | 4 | 4 |
| 7 | ஏனையவை | 2,459 | 2,256 | 3,029 | 3,029 | 3,145 | 3,007 |
| **மொத்தம்** | | **55,230** | **52,520** | **73,383** | **70,678** | **74,366** | **71,712** |

மூலம்: பொலிஸ் போதை தடுப்பு பணியகம்

## 06. சட்டவியல் குற்றங்கள் மற்றும் ஊழல் ஒழிப்பு தொடர்பிலான தேடுதல்கள்

கீழ் காட்டப்பட்டுள்ள அட்டவணையில் 2014 இல் பொலிஸ் திணைக்களம் மற்றும் விசேட அதிரடிப்படையினர் ஊழல் ஒழிப்பு மற்றும் சட்டவிரோத குற்றங்கள் தொடர்பில் மேற்கொண்ட செயற்பாடுகளை அவதானிக்கலாம்.

ஊழல் மற்றும் நியதிச் சட்ட குற்றங்கள் அட்டவணை 08

| # | குற்றங்கள் | 2012 | | 2013 | | 2014 | |
|---|---|---|---|---|---|---|---|
| | | பதியப்பட்டது | தீர்வு காணப்பட்டது | பதியப்பட்டது | தீர்வு காணப் பட்டது | பதியப்பட் டது | தீர்வு காணப்ப ட்டது |
| 1 | ஊழல் | 3,369 | 3,192 | 2,724 | 2,627 | 1,921 | 1,856 |
| 2 | சட்டவியல் குற்றங்கள் | 73,854 | 71,044 | 73,124 | 69,541 | 54,877 | 52,998 |

மூலம்: பொலிஸ் புள்ளிவிபரவியல் பிரிவு

இந்த அட்டவணைக்கு அமைய இது தொடர்பில் 97% மான குற்றங்கள் தீர்க்கப்பட்டுள்ளது .இது 2012,2013 உடன் ஒப்பிடும் போது குறைவானது. மேலும் சட்டவிரோதகுற்றங்களை தீர்க்கும் செயற்பாடு 96% வெற்றியளித்துள்ளது.

ஊழல் மற்றும் சட்டக் குற்றங்கள் தொடர்பில் விசேட அதிரடிப்படையினரின் பங்களிப்பு முக்கியமானது. இதற்கமைய விசேட அதிரடிப்படையினர் 601 தேடுதல் நடவடிக்கைகள் மற்றும் 1121 கைதுகளுக்கு உதவியுள்ளார்கள்.

## 07. சமூக பொலிஸ் சேவைகள்

சட்டம் ஒழுங்கை உறுதி செய்வதன் மூலம் மூலம் பொதுமக்களது சமூக பாதுகாப்புக்கு பொலிஸ் அலுவலர்களுடன் ஒத்துழைப்பதே சமூக பொலிஸ் சேவையின் நோக்கமாகும். சமூகத்தின் ஆதரவுடன் சமூகத்துக்கு சேவை செய்வதே இந்த சேவையின் குறிக்கோளாகும். யுத்தத்தின் போது பயங்கரவாதத்தை ஒழிப்பதற்கு பெரும் பங்காற்றிய சிவில் பாதுகாப்பு குழுவின் வெற்றிகரமான செயற்பாட்டை கீழ் உள்ள அட்டவணை காட்டுகிறது.

**சமூக போலீஸ் சிவில் பாதுகாப்பு குழு மற்றும் கூட்டம்**

அட்டவணை 09

| தொடர் இல | சிவில் பாதுகாப்பு குழு | உருவாக்கப்பட்ட குழுக்கள் | செயற்படுத்தப்பட்ட குழுக்கள் |
|---|---|---|---|
| 01 | மாவட்ட குழுக்களின் எண்ணிக்கை | 24 | 97 |
| 02 | பிரதேச செயலக குழுக்களின் எண்ணிக்கை | 331 | 3,401 |
| 03 | கலந்தாய்வு குழுக்களின் எண்ணிக்கை | 429 | 4,924 |
| 04 | கிராமிய சிவில் பாதுகாப்பு குழுக்களின் எண்ணிக்கை | 14,046 | 306,222 |
| 05 | பொலிஸ் நிலைய குழுக்களின் எண்ணிக்கை | 429 | 4,905 |
| **மொத்தம்** | | **15,259** | **319,549** |

மூலம்: சமூக பொலிஸ் பிரிவு

சமூகத்தின் ஒவ்வொரு பகுதியையும் தழுவியதாக சிவில் பாதுகாப்பு குழு நிகழ்சிகளை முன்னெடுத்தது. பாடசாலை மாணவர்களுக்கு திறமையை வளர்த்தல் துஸ்பிரயோகம், குற்றங்கள் தொடர்பில் 2014 இல் சிவில் பாதுகாப்பு குழு வழங்கப்பட்ட பல்வேறுபட்ட நிகழ்சிகளை கீழே உள்ள அட்டவணை காட்டுகிறது.

**சமூக போலீஸ் சிவில் பாதுகாப்பு குழுவின் கடமைகள்** அட்டவணை 10

| தொடர் இல | விபரம் | தொகை |
|---|---|---|
| 01 | சமூக பொலிஸ் சேவை/மூலம் பாடசாலை மாணவர்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் கருத்தரங்குகள் | 19,369 |
| 02 | சமூகத்துக்கு தொழில் பயிற்சி வழிகாட்டல் திட்டம் | 3,091 |
| 03 | பாடசாலை வான் சாரதிகளுக்கு சமூக தொழில்பயிற்சி தொடர்பில் அறிவுறுத்தல் | 9,977 |
| 04 | சமூக பொலிஸ் சேவை/மூலம் மாணவர்கள் மத்தியில் பல்வேறுபட்ட விளையாட்டு நிகழ்வுகளை நடாத்துதல் | 3,107 |
| 05 | குற்றங்கள்/ பிள்ளைகளுக்கு எதிரான வன்முறை/பெண்களுக்கு எதிரான வன்முறை/ வாகனங்கள்/போதை பொருட்கள் | 186,189 |
| 06 | டெங்கு முதலிய தோற்று நோய்கள் பற்றிய அறிவுறுத்தல் | 156,089 |
| 07 | பிள்ளைகளுக்கு எதிரான வன்முறை/சிறுவர் துஸ்பிரயோகம்/தலைமைத்துவம் | 19,369 |
| 08 | பாடசாலையை விட்டு விலகிய மாணவர்களுக்கு அறிவுறுத்தல் | 3,091 |
| 09 | பாடசாலை வான் சாரதிகள்/உதவியாளர்களுக்கு அறிவுறுத்தல் | 9,977 |
| 10 | பஸ்/முச்சக்கரவண்டி/லொறி/மற்றும் ஏனைய வாகன சாரதிகளுக்கு அறிவுறுத்தல் | 26,312 |
| 11 | போதை,மது ஒழிப்பு தொடர்பில் | 30,858 |
| 12 | ஏனைய விடயங்கள் | 61,351 |
| **மொத்தம்** | | **524,270** |

மூலம்: சமூக பொலிஸ் பிரிவு

அட்டவணை 11

| தொடர் இல | மாகாணம் | பாடசாலை மாணவர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்சிகள்(உ: சிறுவர்களுக்கு எதிரான வன்முறை/ சிறுவர் துஸ்பிரயோகம் / தலைமைத்துவம்.) | பேச்சு போட்டி/சித்திர போட்டி/ பாடசாலை மாணவர்களுக்கு இடையிலான ஏனைய விளையாட்டு நிகழ்சிகள் |
|---|---|---|---|
| 1 | **மத்திய** | **4028** | **1883** |
| 2 | **சப்பிரகமுவ** | **1974** | **94** |
| 3 | **ஊவா** | **1945** | **200** |
| 4 | **தென்** | **2470** | **217** |
| 5 | **கிழக்கு** | **1627** | **105** |
| 6 | **வடக்கு** | **1433** | **176** |
| 7 | **வட மத்திய** | **1355** | **33** |
| 8 | **வட மேல்** | **2092** | **170** |
| 9 | **மேல்** | **2445** | **229** |
| **மொத்தம்** | | **19 396** | **3 107** |

மூலம்: சமூக பொலிஸ் பிரிவு

# 08. சூழல்  பாதுகாப்பு

நகரை சுத்தமாக வைத்திருப்பதற்கு சுற்றாடல்  பாதுகாப்பு பிரிவு நாடு பூராவும் பொலிஸ் நிலையங்களுடன் இணைக்கப்பட்டுள்ள சுற்றாடல் அலகுகள், மாநகர சபைகள் நகர சபைகள் மாகாண சபைகள் அபான்ஸ்,பர்ன்ஸ்,கெயார் கிளீன் முதலிய தனியார் நிறுவனங்கள் போன்றவற்றுடன் இணைந்து செயற்பட்டது. கொழும்பு மற்றும் புறநகர் பகுதிகளிள் உட்பட நாடு பூராகவும் உள்ளடக்கக் கூடியதாக  2014 இல் சிரமதான திட்டங்கள் மற்றும் பல பல்வேறு திட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

சுகாதார அமைச்சுடன் இணைந்து ஆண்டு முழுவதும் விசேட நிகழ்சிகளை முன்னெடுத்ததன் மூலம்  நாட்டில் பாரிய பிரச்சினையை உருவாக்கிய டெங்கு நோயை ஓரளவுக்கு தடுக்க முடிந்தது. பொலிஸ் திணைக்களம் இலங்கை கடற்படை, காணி மீட்பு அபிவிருத்தி கூட்டுத்தாபனம் என்பவற்றுடன் இணைந்து மேல் மாகாணத்தில் உள்ள அனைத்து கால்வாய்களையும் விரிவு படுத்துவதுடன் அவற்றை தினமும் சுத்திகரித்து சரியான முறையில் பராமரிப்பதன் மூலம் மழை காலத்தை சமாளிக்க முடிகிறது.

2014 இல் சூழலை பாதுகாப்பதற்காக மேற்கூறப்பட்ட நிகழ்சிகள் தொடர்ச்சியாக செயற்படுத்தப்பட்டன.




**கால்வாய்களை துப்பரவு செய்வதை பரிசோதனை செய்தல்.**

## 09. பொலிஸ் தலைமையகத்தால் செயற்படுத்தப்படும் பொதுமக்கள் சேவைகள்

09:1 பொலிஸ்மா அதிபரின் பொதுமக்களுக்கான சேவைகள்

பொலிஸ்மா அதிபரின் நேரடி கவனத்தை பெற்ற சேவையாக இந்த சேவை விளங்குகிறது. மேலும் பொதுமக்களின் பிரச்சனைகளை வெற்றிகரமாக தீர்க்கும் அங்கீகரிக்கப்பட்ட முறையாகவும் இது விளங்குகிறது. 2014 இல் பெறப்பட்ட முறைப்பாடுகளுக்கு செயற்திறனாக விதத்தில் தீர்வுகள் வழங்கப்பட்டன. கீழே தரப்பட்ட அட்டவணை 90% இது பெறப்பட்டமையை காட்டுகிறது.

அட்டவணை 12

| தொடர் இல | மாகாணம் | கிடைத்த முறைப்பாடுகளின் எண்ணிக்கை | விசாரணை முடிக்கப்பட்ட எண்ணிக்கை | விசாரணையில் உள்ள எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 1 | மேல் மாகணம் | 950 | 845 | 105 |
| 2 | தென் மாகணம் | 148 | 143 | 06 |
| 3 | சப்பிரகமுவ மாகணம் | 103 | 96 | 17 |
| 4 | வடமேல் மாகணம் | 100 | 87 | 13 |
| 5 | மத்திய மாகணம் | 67 | 60 | 07 |
| 6 | வடமத்திய மாகணம் | 29 | 28 | 01 |
| 7 | கிழக்கு மாகணம் | 17 | 16 | 01 |
| 8 | வடக்கு மாகணம் | 13 | 09 | 04 |
| 9 | ஊவா மாகணம் | 23 | 23 | - |

மூலம்: பொலிஸ் ஒம்புட்ஸ்மன் பிரிவு



பொலிஸ் தலைமையகத்தில் செயற்படுத்தப்பட்ட பொதுமக்கள் தினம்

## 09:2 119 அவசர அழைப்பு சேவை

ஆரம்பித்த காலம் முதல் வினைத்திறனான விதத்திலும் வெற்றிகரமாகவும் செயற்பட்ட சேவையாக 119 அவசர அழைப்பு சேவை காணப்படுகிறது. 2014 இல் 99% இதன் செயற்திறன் பெறப்பட்டமையை கீழே தரப்பட்ட அட்டவணை காட்டுகிறது.

அட்டவணை 13

| வருடம் | முறைப்பாடுகளின் வகைகள் | | | | | | | தீர்க்கப்பட்ட முறைப்பாடுகள் |
|---|---|---|---|---|---|---|---|---|
| | குற்றங்கள் | வாகனங்கள் | ஊழல்கள் | சிறிய முறைப்பாடுகள் | குடும்ப பூசல்கள் | ஏனையவை | மொத்தம் | |
| 2013 | 52,113 | 65,114 | 140,540 | 291,924 | 38,777 | 87,801 | **676,269** | **665,900** |
| 2014 | 65,886 | 69,180 | 178,546 | 330,243 | 47,921 | 106,698 | **798,474** | **793,457** |

மூலம்: **119** அவசர அழைப்பு சேவை

# 10 மனித வள மேம்பாடு

பொலிஸ் திணைக்களம் கொண்டுள்ள வளங்களில் மனித வளமானது மிகப் பெறுமதியான வளமாகும். வினைத்திறன் மிக்க பயனுறுதிவாய்ந்த பொலிஸ் சேவைக்கு மனித வள அபிவிருத்திமிக அவசியம். பதவியுயர்வுகள்,பயிற்சிகள் மூலம் மனித வளத்தை மேம்படுத்தும் செயற்பாடுகளில் பொலிஸ் திணைக்களம் தொடர்ச்சியாக ஈடுபட்டு வருகிறது. கீழே தரப்பட்டுள்ள அட்டவணைகளுக்கு அமைய 2014 இல் பேர் 3385 பொலிஸ் திணைக்களத்தின் பல்வேறு நிலைகளுக்கும் விசேட அதிரடிப்படைக்கும் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டார்கள். 45 உத்தியோகத்தவர்களுக்கு பதவியுயர்வு வழங்கப்பட்டது.

10.1 இலங்கை பொலிஸ் மற்றும் விசேட அதிரடிப்படைக்கான புதிய உள்ளீர்ப்புகள்

அட்டவணை 14

| தொடர் இல | நிலை | ஆட்சேர்ப்புகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 01 | பிரதிப் பொலிஸ்மா அதிபர் | 03 |
| 02 | உதவிப் பொலிஸ் பரிசோதகர் | 213 |
| 03 | பொலிஸ் கன்ஸ்டபிள் | 1,370 |
| 04 | பொலிஸ் கன்ஸ்டபிள்/ விசேட அதிரடிப்படை | 570 |
| 05 | பெண் பொலிஸ் கன்ஸ்டபிள் | 308 |
| 06 | பெண் பொலிஸ் கன்ஸ்டபிள்/ விசேட அதிரடிப்படை | 53 |
| 07 | பொலிஸ் கன்ஸ்டபிள் சாரதிகள் | 798 |
| 08 | பொலிஸ் கன்ஸ்டபிள் சாரதிகள் / விசேட அதிரடிப்படை | 70 |
| **மொத்தம்** | | **3,385** |

மூலம்: ஆட்சேர்ப்பு பிரிவு

10.2 இலங்கை பொலிஸ் மற்றும் விசேட அதிரடிப்படைக்கான பதவியுயர்வுகள்

அட்டவணை 15

| தொடர் இல | நிலை | ஆட்சேர்ப்புகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 01 | சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் தொடக்கம் பொலிஸ் மா அதிபர் | 16 |
| 02 | உதவி பொலிஸ் அத்தியட்சகர் தொடக்கம் பொலிஸ் அத்தியட்சகர் | 05 |
| 03 | பிரதான பொலிஸ் பரிசோதகர் தொடக்கம் உதவி பொலிஸ் அத்தியட்சகர் | 124 |
| 04 | பிரதான பொலிஸ் பரிசோதகர் தொடக்கம் உதவி பொலிஸ் அத்தியட்சகர் / விசேட அதிரடிப்படை | 15 |
| 05 | பொலிஸ் பரிசோதகர் தொடக்கம் பிரதான பொலிஸ் பரிசோதகர் | 260 |

| மொத்தம் | **405** |
|---|---|

மூலம்: ஆளணி மற்றும் நிர்வாக பிரிவு

## 10.3 உள்ளூர் பயிற்சி நிகழ்சிகள்

.

32,205 உத்தியோகத்தவர்களுக்கு உள்ளூர் பயிற்சி வழங்கப்பட்டது. இந்த பயிற்சிகள் குற்றப்புலனாய்வு, வழக்கு கையாள்கை சமூக காவல் போக்குவரத்து கட்டுப்பாடு அங்கிலம் தமிழ் ஆகிய துறைகளில் அளிக்கப்பட்டது.

அட்டவணை 16

| தொடர் இல | நிறுவனங்கள் | பங்குபற்றிய அலுவர்கள் | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | சிரேஸ்ட அலுவலர்கள் | பரிசோதகர் தர அலுவலர்கள் | கனிஷ்ட தர அலுவலர்கள் | மற்ற வர்கள் | மொத்தம் |
| 01 | தேசிய பொலிஸ் பயிற்சி நிறுவனம் | 216 | 1,072 | 59 | - | 1,347 |
| 02 | இலங்கை பொலிஸ் கல்லூரி | 03 | 511 | 1,816 | - | 2,330 |
| 03 | ஜெனரல் ஜோன் கொத்தலாவ பாதுகாப்பு பல்கலைக்கழகம் | 01 | 19 | 02 | - | 22 |
| 04 | சேவை பயிற்சி நிறுவனங்கள் | 16 | 1,721 | 25,597 | - | 27,334 |
| 05 | ஏனைய பல்கலைக்கழகங்களும் பயிற்சி நிலையங்களும் | 63 | 232 | 232 | 14 | 1,172 |
| **Total** | | **299** | **4,186** | **27,706** | **14** | **32,205** |

மூலம்: இலங்கை பொலிஸ் கல்லூரி





**சில பயிற்சி நிகழ்சிகள்**

## 10.4 வெளிநாட்டு பயிற்சி நிகழ்சிகள்

அறிவு மற்றும் மனப்பாங்கினை விருத்தி செய்யவும் அபிவிருத்தி அடைந்த நாடுகளில் பயன்படுத்தப்படும் பொதுமக்கள் பாதுகாப்பு, குற்றங்களை தடுத்தல் போன்றவற்றுக்கான பதிய வழிமுறைகள் தொடர்பில் சரியான பயிற்சியை வழங்கவும் , நேர்முகத்தேர்வு மூலம் தெரிவு செய்யப்பட்ட ஆண்,பெண் உத்தியோகத்தர்களை வெளிநாட்டு பயிற்சி நிகழ்ச்சிகளுக்கு அனுப்ப 2014 இல் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அட்டவணை 17

| தொடர் இல | பயிற்சிகளின் எண்ணிக்கை | நாடுகளின் தொகை | பங்குபற்றிய அலுவர்கள் (நிலைகள்) |
|---|---|---|---|
| 01 | 73 | 26 | SDIG 08<br>DIG 09<br>SSP 26<br>SP 07<br>ASP 38<br>CI 12<br>IP 37<br>SI 17<br>PS 01 |

மூலம்: இலங்கை பொலிஸ் கல்லூரி









# 11. பௌதீக வளங்களின் அபிவிருத்தி

மனித வளங்களை போன்று பௌதீக வளங்களும் முக்கியமானவை ஏனெனில் மனித வளங்களை பயனுள்ளதாகவும் வினைத்திறன் மிக்கதாகவும் பயன்படுத்த பௌதீக வளங்கள் மிக முக்கியமானவை. பௌதீக வளங்களின் அபிவிருத்திக்காக 2014 இல் பின்வரும் செயற்திட்டங்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டது.

## 11.1 ஏற்கனவே உருவாக்கப்பட்ட கட்டடங்களை அமைத்தல்

வடக்கு கிழக்கில் கடமையாற்றும் பொலிஸ் அலுவலர்களின் தங்குமிடப் பிரச்சினைகளுக்கு உடனடி தீர்வாக ஏற்கனவே உருவாக்கப்பட்ட கட்டடங்களை அமைக்கும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டதுடன் இதன் முதல் தொகுதி வெற்றியளித்தமையை தொடர்ந்து இச் செயற்திட்டம் நாடு பூராகவும் முன்னெடுக்கப்பட்டது.. மூன்று கட்டங்களில் முதல் கட்டம் நிறைவடைந்துள்ள நிலையில் மற்றைய இரு தொகுதிகளும் 2013-2015 காலப்பகுதியியில் நிறைவு செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கமைய 13 பொலிஸ் பிரிவுகளில் உள்ள 175 கட்டடங்களில் 173 கட்டிடங்கள் 2013 இல் அமைக்கப்பட்டுள்ளன.இது 98மூ வீதமாகும் மூன்றாம் கட்டத்தில் 2015 இல் 47 பொலிஸ் பிரிவுகளில் 300 கட்டிடங்களை அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

## 11:2 விசேட அதிரடிப்படையினருக்கு ஏற்கனவே உருவாக்கப்பட்ட கட்டடங்களை அமைத்தல்

பல்வேறு தேவைகளுக்காக முன்னுரிமை அடிப்படையில் விசேட அதிரடிப்படையினருக்கு ஏற்கனவே உருவாக்கப்பட்ட கட்டடங்களை அமைப்பதற்கான அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.இதற்கமைய 272 கட்டடங்கள் அமைக்கப்படவுள்ளதொடு 2014 இறுதியில் 63 கட்டிமுடிக்கப்பட்டுள்ளன.

## 11:3 ஏனைய கட்டடங்களை அமைத்தல்

பொலிஸ் நிலையங்கள் பொலிஸ் அலுவலங்கள் உள்ளிட்ட 84 கட்டிடங்கள் அமைக்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது. கட்டப்படவுள்ள பொலிஸ் நிலையங்களின் எண்ணிக்கை 52.

| | | | |
|---|---|---|---|
| 01. | அகலவத்த | 05. | தெனியாய |
| 02. | கட்டான | 06. | நிலாவெளி |
| 03. | கொச்சிகடே | 07. | பதுளை |
| 04. | தீவிலுபிட்டிய | 08. | வலஸ்முல்ல |





## 12. நிதியியல் செயலாற்றுகை

2014 ம் ஆண்டில் விசேட அதிரடிப்படை உள்ளிட்ட பல்வேறு அபிவிருத்தி நடவடிக்கைகள் பொலிஸ் திணைக்களத்தில் அமுல்படுத்தப்பட்டன பொருளாதர செயலாற்றுகையின் மொத்த மீண்டெலும் மற்றும் மூலதன செலவுகள் கீழே தரப்பட்டுள்ளன.

அபிவிருத்தி திட்டங்களின் நிதி செயற்பாடு — அட்டவணை 18

| | திட்டம் | பெறப்பட்ட ஒதுக்கீடு | வருடத்தினுள் மாற்றப்பட்டது | நிகர ஒதுக்கீடு | 31.12.2014 வரையான செலவு |
|---|---|---|---|---|---|
| இலங்கை பொலிஸ் | | | | | |
| 1 | பொலிஸ் தலைமையகத்துக்கான மாற்றீடு செயற்திட்டம் | 89 | 435 | 524 | 516 |
| 2 | பயிற்சி கல்லூரியை அபிவிருத்தி செய்தல் | 500 | (485) | 15 | 6.6 |
| 3 | பொலிஸ் அலுவலர்களுக்கான வீடமைப்பு திட்டம் | 750 | (695.4) | 54.6 | 52.4 |
| 4 | பொலிஸ் சி.சி ரீவி திட்டங்கள் | 1,500 | (1,489) | 11 | - |
| 5 | பொதுவான கட்டிடங்களின் கட்டமைப்பும் அபிவிருத்தியும் | 575,2 | (570) | 5.2 | 0.2 |
| 6 | உப கூட்டுத்தொகை | 1,000 | (213) | 787 | 786 |
| விசேட அதிரடிப்படை | | **4,414.2** | | **1,396.8** | **1,361.2** |
| விசேட அதிரடிப்படை | | | | | |
| 1 | முன் கட்டமைக்கப்பட்ட | - | 305 | 305 | 305.5 |
| 2 | பொதுவான கட்டிடங்களின் கட்டமைப்பும் அபிவிருத்தியும் | 200 | - | 200 | 108.7 |
| உப கூட்டுத்தொகை | | 200 | 305 | 505 | 412.2 |
| மொத்தம் | | **4,614.2** | | **1,901.8** | **1,773.4** |

மூலம்: கட்டிட பிரிவு

- மொத்த நிதி செயலாற்றுகை

அட்டவணை **19**

| நிறுவனம் | திருத்தப்பட்ட ஒதுக்கீடு -2014 | | 31.12.2014 வரையான மொத்த செலவீனம் | | வினைத்திறன் (%) | |
|---|---|---|---|---|---|---|
| | மீட்கை | மூலதனம் | மீட்கை | மூலதனம் | மீட்கை | மூலதனம் |
| இலங்கை பொலிஸ் | 43,945,800 | 3,662,425 | 43,584,391 | 3,005,275 | 99.2 | 82 |
| விசேட அதிரடிப்படை | 5,612,500 | 6,007,500 | 5,612,500 | 5,844,293 | 100 | 97.3 |

மூலம்: பிரதான கணக்காளர் –பொலிஸ் தலைமையகம்

## 2014 ம் ஆண்டு செயற்திறன் சுருக்கமாக

2014 ம் ஆண்டில் நாட்டின் சட்ட ஒழுங்கினை பாதுகாக்கும் பிரதான நிறுவனமாக பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் பொலிஸ் திணைக்களம் அர்ப்பணிப்புடன் சேவையாற்றியிருந்தது

போலீசார் எப்பொழுதும் சட்டரீதியாகவும் ஒழுக்கமாகவும் செயற்பட்டு வந்தாலும் சூழலில் பல்வேறுபட்ட சவால்களையும் இடையூறுகளையும் அவர்கள் எதிர்கொள்கிறார்கள். இருப்பினும் கடமைக்கு முதலிடம் வழங்கும் பொலிஸ் திணைக்களம் அவர்களின் அர்பணிப்பு மிகு சேவை மூலம் அடைந்த முன்னேற்றங்களும் சில வீழ்ச்சிகளும் கீழே தரப்பட்டுள்ளன.

- சிசிடிவி கேமராக்கள் மற்றும் தானியங்கி கைரேகை கருவி தொழில்நுட்பம் மூலம் குற்ற விசாரணை வேகப்படுத்தப்பட்டுள்ளமை மிகப்பெரிய வெற்றியளித்துள்ளது.
- குழந்தைகள் மற்றும் பெண்களுக்கு எதிரான குற்றங்கள் தீர்க்கும் செயற்பாடு 24மூ இல் இருந்து 42மூ மாக அதிகரித்துள்ளதுமது மற்றும் போதையுடன் தொடர்புபட்ட குற்றங்கள் தீர்க்கும் செயற்பாடு 95மூ இல் இருந்து 96மூ மாக அதிகரித்துள்ளது
- ஊழல் மற்றும் சட்ட ஒழுங்கு பிரச்சினையுடன் தொடர்புபட்ட குற்றங்களுக்கான தீர்வினை காணல் 97மூ மாகியுள்ளது. விசேட அதிரடிப்படையினர் அவர்களின் பாரிய பங்களிப்பை இதற்கு வழங்கியுள்ளார்கள்.
- வீதி விபத்துகள் தொடர்பிலான விழிப்புணர்வு நிகழ்சிகளால் நாங்கள் வீதி விபத்துகளை வெற்றிகரமாக குறைத்துள்ளோம்
- நாட்டில் காணப்படும் வாகனங்களின் எண்ணிக்கை மக்கள் தொகையுடன் ஒப்பிடும் போது வீதி விபத்துகளும் இறப்போர் தொகையும் குறைவடைந்துள்ளது.
- பல்வேறுபட்ட பிரச்சினைகளுக்கும் தீர்வினை வழங்குதல் சிறந்த முன்னேற்றத்தை காட்டுவதுடன் 119 இலக்கத்துக்கான அவசர தொலைபேசி அழைப்புக்கள் 99மூ செயற்திறன் மிக்கதாக காணப்படுகிறது.
- நடைமுறை சிக்கல்கல்கள் காரணமாக கட்டிட நிர்மாணங்களில் இடர்பாடு ஏற்பட்டாலும் புதிய பொலிஸ் நிலையங்களை நிர்மாணிக்கும் பணி தொடர்ந்தும் இடம்பெற்று வருகிறது.